செ.வெ.எண்.34 நாள்.13.04.2017

**டிஜி-தன் திட்டத்தின் 100–ம் நாள் மற்றும் நிறைவு விழா.**

**மாண்புமிகு பிரதமர் அவர்கள் காணொளி காட்சி மூலம் உரையாற்றுகிறார்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடி ஒளிபரப்பு

-------

**பொது மக்களிடையேயும், வணிகர்களிடையேயும் மின்னணு முறையில் பண பரிமாற்றத்தை விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அச்செயலை மேலும் ஊக்குவிக்கவும் மத்திய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மின்னணு பணபரிவர்த்தனையில் ஈடுபடும், பொது மக்களுக்காக ”லக்கி கிரகஹ திட்டம்” என்ற பெயரிலும், வணிகர்களுக்காக ”டிஜி-தன் வியாபார திட்டம்” என்ற பெயரிலும் தினசரி பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் 100-வது நாள் விழா மற்றும் நிறைவு விழா நாளை 14-04-2017 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.**

**14-04-2017 அன்று காலை 10-00 மணியளவில் கல்லூரி மாணவ, மாணவியருக்கான வினாடி-வினா நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதனை தொடர்ந்து பல்வேறு மின்னணு பண பரிவர்த்தனை முறைகள் பற்றிய விபரங்கள் மாவட்ட தகவலியல் அலுவலரால் விளக்கப்படும். பின்னர் மின்னணு பண பரிவர்த்தனைக்காக பொதுமக்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி பல்வேறு வங்கி அதிகாரிகள் விளக்கமளிக்க இருக்கிறார்கள்.**

**வணிகர்கள் தங்கள் வணிகத்தில், வங்கி அட்டையை கொண்டு POS மூலமும், QR Code மூலமும், யூ.பி.ஐ (UPI) மூலமும் பண பரிமாற்றம் செய்வதற்கு தேவையான அனைத்து செயல் முறை விளக்கங்களும் அனைத்து வங்கி அதிகாரிகளாலும் வழங்கப்படவும் உள்ளது.**

**இதனை தொடர்ந்து,** மதியம் **மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நாக்பூரிலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றும் முக்கிய நிகழ்வும்,** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடி ஒளிபரப்பு மூலம் **காட்டப்படவுள்ளது.**

**மாவட்டத்திலுள்ள வணிகர்கள், பொது மக்கள், அரசு ஊழியர்கள், பெண்கள், கல்லூரி மாணவ, மாணவியர் ஆகியோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு மின்னணு பரிவர்த்தனை பற்றிய தங்களின் சந்தேகங்களை சம்பந்தபட்டவர்களிடம் நேரிடையாக கேட்டு தெளிவு பெற்றுக் கொள்ளலாம் என** மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் **கேட்டுக் கொண்டுள்ளார்.**

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.